**தலைப்பு 315 வட மாகாண சபை– 2023**

## 01. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

நல்லாட்சியை முறைப்படி நடைமுறைப்படுத்துவதன் மூலம் வடக்கு மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் சுபீட்சத்தினையும் நிலைபேறான அபிவிருத்தியையும் அடைதல்.

### 1.2 பணிக்கூற்று

வடக்கு மக்களை மையப்படுத்தி சேவைகளையும், வசதிகளையும் மீள செயற்படுத்துதல் மூலம் மனிதவள வாண்மைவிருத்தியையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மீள் உருவாக்கம் செய்து வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல்.

### 1.3 செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 02. மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

வட மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா.40,855.75 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா. 37,550.93 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, சேமிப்புக்களானது மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா.3,304.82 மில்லியன் அல்லது 08 சதவீதம் ஆகக் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 36,324.00 | 34,064.02 | 2,259.98 | 6.22 |
| மூலதனம் | 4,531.75 | 3,486.91 | 1,044.84 | 23 |
| **மொத்தம்** | **40,855.75** | **37,550.93** | **3,304.82** | **08** |

## 03. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு அதற்கிணங்க பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.